உங்களுக்கு சுகாதாரக் கவனிப்புச் சேவை வழங்கும் நிறுவனமாக, 'ஓவர்லேக் மெடிக்கல் சென்டர்' மையத்தைத் தேர்ந்தெடுத்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். நீங்கள் சேவைகளுக்காக எங்களிடம் பதிவு செய்து கொள்ளும் நேரத்தில் இருந்து, உங்களது நோயாளிக் கணக்கைத் தீர்த்து அனுப்பும் வரை, எங்களோடு உங்களுக்கு ஏற்படும் அனுபவம் கூடுமான மட்டும் இனிமையானதாக இருக்க வேண்டும் என்றே நாங்கள் விரும்புகிறோம். சுகாதாரச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் பணக் கஷ்டங்களும் சேர்ந்து வரலாம் என்பதை நாங்கள் புரிந்துணர்ந்து கொள்கிறோம் அதோடு நாங்கள், உங்களுக்கு உதவுவதற்கான திட்டங்களைத் தருகிறோம் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென நாங்கள் விரும்புகிறோம். நாங்கள் நிதி ஆலோசகர்களைப் பணியமர்த்தியிருக்கிறோம் அவர்கள் எங்களது திட்டங்கள் குறித்து உங்களுக்கு இருக்கக்கூடிய எக்கேள்விகளுக்கு இன்முகத்தோடு பதிலளித்து, உங்களுக்கு மிகச் சிறப்பாகப் பொருந்தக்கூடிய திட்டத்திற்கு விண்ணப்பித்துப் பயன்பெற உங்களுக்கு உதவ முடியும்.

## 'புராம்ப்ட் பே டிஸ்கவுண்ட்' திட்டங்கள்

இந்தத் திட்டம், காப்பீட்டுப் பாதுகாப்பு இல்லாத, மருத்துவ ரீதியாக அவசியமான சேவைகளுக்கு மட்டுமே கிடைக்கின்றது. இந்தத் திட்டம், மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் தகுதியடைந்து, அவர்கள் பெறக்கூடிய காப்பீட்டை ஏற்கெனவே பெற்று, வரம்பு கடந்து விட்ட நோயாளிகளுக்கும் பொருந்துகிறது. அந்நோயாளிகள், முதல் கட்டண அறிக்கையைக் கொடுத்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள், 'ஓவர்லேக் மெடிக்கல் சென்டர்' மற்றும்/அல்லது 'ஓவர்லேக் மெடிக்கல் கிளினிக்'குகளுக்குச் செலுத்த வேண்டிய மீதத்தொகை முழுவதையும் செலுத்துவதன் மூலம், மொத்தக் கணக்குக் கட்டணங்களில் இருந்து ஒரு 30% கட்டணத் தள்ளுபடி பெற்றுக் கொள்கிறார்கள். தள்ளுபடியைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தயவுசெய்து நிதி ஆலோசகர் ஒருவரை 425.688.5655 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது 425.688.5299 என்ற எண்ணில் எங்களை அழையுங்கள்.

## 'எக்ஸ்டெண்டட் பேமெண்ட் பிளான்' திட்டம்

வட்டியில்லாமல் பணம் செலுத்தும் திட்டம் ஒன்றைத் தோற்றுவிப்பதில் உங்களோடு சேர்ந்து உழைப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். உள்ளபடி மாதாந்திரம் செலுத்தும் தொகையும், ஒப்பந்தக் கால அளவும், நீங்கள் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையைப் பொருத்தே இருக்கும். பணம் செலுத்தும் திட்டங்கள் அனைத்திற்கும் நீங்கள் ஒப்பந்தம் செய்து கொண்ட திட்டம் மற்றும் 'ஓவர்லேக்'-ன் நிதி ஆலோசகர்கள் குறித்துக் கொடுத்துள்ள தொகை ஆகியவற்றின் அடிப்படையில் மாதாமாதம் ஒரு தொகையைச் செலுத்துவது அவசியமாகிறது. பணம் செலுத்தும் திட்டங்கள் சம்பந்தமான கேள்விகளுக்கு, தயவுசெய்து 425.688.5299 என்ற எண்ணில் அழையுங்கள்.

## 'ஃபினான்ஷியல் அசிஸ்டன்ஸ்' திட்டம்

இந்தத் திட்டம், காப்பீட்டு நிறுவனம் பணம் செலுத்தி விட்ட பிறகு, நோயாளி செலுத்த வேண்டிய பங்குத் தொகையில், அல்லது காப்பீட்டுப் பலன்கள் எதுவும் இல்லாத போது, நோயாளிக்கு நிதி உதவி செய்து தருவதற்குக் கிடைக்கிறது. சேவை வழங்கும் நேரத்தில் இருக்கும் உங்களது நிதிச் சூழ்நிலையைப் பொருத்து, உங்களது கணக்கில் இருக்கும் மீதத்தொகையில், 65% முதல் 100% வரை தள்ளுபடி பெறுவதற்கும் நீங்கள் தகுதியடையலாம். தள்ளுபடித் தொகையானது, நீங்கள் செலுத்த வேண்டிய மீதத்தொகையோடு சேர்ந்து, 'மத்திய அரசின் வறுமை வழிகாட்டுதல்கள்'-ன் ஒரு குறிப்பிட்ட சதவீதமாக, உங்களது வருமானத்தின் ஒரு எதிர்பாராத செலவாக இருக்கிறது. இந்தத் திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கு, மருத்துவச் சேவைகளை வழங்கி முடித்த பிறகு மற்றும்/அல்லது உங்களது நிதிப் பொறுப்பினைத் தெரிந்து கொண்ட பிறகு, நீங்கள் ஒரு 'நிதி உதவி விண்ணப்பம்' ஒன்றைக் கேட்டுப் பெற்று அதனைப் பூர்த்தி செய்து தர வேண்டியிருக்கும். அவ்விண்ணப்பத்தில், உங்களது வருமானம் குறித்த குறிப்பான தகவல்களை நீங்கள் வழங்க வேண்டியிருக்கும், அதோடு, விண்ணப்ப நடைமுறையின் போது, சுகாதாரக் கவனிப்பு தொடர்பான உங்களது நிதிநிலைச் சோதிப்பு (உங்களது நிதிநிலைத் தரவரிசையைப் பாதிக்காத) ஒன்றை நடத்திக் கொள்வதற்கான

*உரிமை ‘ஓவர்லேக் ஹாஸ்பிட்டல் அசோசியேஷனுக்கு’ இருக்கிறது. இந்தத் திட்டம் குறித்த இன்னும் அதிக விவரமான விளக்கத்திற்கு, அல்லது விண்ணப்பம் ஒன்றை வேண்டிப் பெறுவதற்கோ தயவுசெய்து 425.688.5299 என்ற எண்ணில் அழையுங்கள். நிதி உதவித் திட்டமானது, DSHS மற்றும் மூன்றாம்-தரப்புக் கடமை நிலைமைகள்*

*(உ.ம். ஆட்டோ அல்லது மற்ற விபத்துப் பாதுகாப்பு) உள்ளிட்ட மற்ற பணம் செலுத்தும் வழிவகைகள் அனைத்தையும் பெற்று முடித்து விட்ட பிறகே பொருந்துகிறது.*